# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 02 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

<u>வினாத்தொகுதி:01</u>

(i) பாடலின் பேசு பொருளை (துறை) குறிப்பிடுக.

(ii) மேல்வரும் சொற்களுக்கான பொருனை எழுதுக.

(iii) "தலைவன் தலைவியை விட்டு பிரிதல் அறமன்று" எனும் கருத்து தொணிக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணியினை எடுத்து விளக்குக.

(ii) தலைவனின் மன நிலையினை எடுத்துக்காட்டுக.

(iii) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:03</u>

(i) தோழியின் மதி நுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றதெனக் குறிப்பிடுக.

(ii) பாடலில் இறைச்சி பொருள் விளக்கப்பட்டுள்ளவாற்றை எடுத்துக்காட்டுக.

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)